## அரச நிறுவனங்களுடைய தற்காலிக மிகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2015

அரச நிறுவனங்களுடைய தற்காலிக மிகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் 2005 ஆகஸ்ட் 03 இல் கைச்சாத்திடப்பட்ட 109 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பு ஒப்பந்த ஆவணத்தின் 23 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 109 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பு ஒப்பந்த ஆவணத்தின் 22 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற மீளாய்வாண்டிற்கான நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

109 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பு ஒப்பந்த ஆவணத்தின் 22 ஆம் பிரிவின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு வருடாந்த அறிக்கை என்பன 2018 ஒக்தோபர் 12 வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் இருக்கும் தன்மை

நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இறுதியாக கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | **2014**<br>**ரூபா** |
|---|---|
| **சொத்துக்கள்** | |
| நடைமுறைக் கணக்கு | 127,907 |
| விற்பனைக்கான உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணைகள் | 54,238,218 |
| திறைசேரி முறிகள் | 875,497,049 |
| பெறவேண்டிய வட்டி | 285,994 |
| ஏனைய பெறவேண்டியவைகள் | 484,776,813 |
| | **1,414,925,981** |

| | |
|---|---|
| **பொறுப்புக்கள்** | |
| ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 251,135 |
| நம்பிக்கைப் பொறுப்பு மூலதனம் | 1,366,971,976 |
| நிறுத்திவைக்கப்பட்ட இலாபம் (செலுத்த வேண்டிய பங்கிலாபம்) | 47,702,870 |
| | **1,414,925,981** |

## 2.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றின்மை

நிதியத்தால் மீளாய்வாண்டிற்காக பேணப்பட்ட தகவல்களில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் விடயங்களிற்கு எதிராக சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றாதாரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| **விடயம்** | **பெறுமதி** | **சமர்ப்பிக்கப்படாத சான்று** |
|---|---|---|
| | **ரூபா** | |
| பெறவேண்டிய திறைசேரி | 484,776,813 | திறைசேரியிடமிருந்தான மீதி உறுதிப்படுத்தல் |
| பன்னிரண்டு பங்குபற்றுநர் கணக்குகள் | 1,313,328,898 | பங்குபற்றுநர்களிடமிருந்தான மீதி உறுதிப்படுத்தல் |

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|---|
| (அ) | 2005 ஆகஸ்ட் 03 இல் கைச்சாத்திடப்பட்ட 109 ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பு ஒப்பந்த ஆவணத்தின் 12 ஆம் பிரிவின் (அ) பந்தி | நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை ஆகக் குறைந்தது மூன்று மாதங்களிற்கு ஒரு தடவை கூட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது எந்தவித கூட்டமும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2005 ஆகஸ்ட் 03 ஆம் திகதிய அரசாங்க நிறுவனங்களுடைய தற்காலிக மிகை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களிற்கும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதிய முகாமையாளரான இலங்கை வங்கிக்கும் இடையேயான புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தின் விடய இலக்கம் 06 | ஆகக் குறைந்தது ஒவ்வொரு ஆறு மாதங்களிற்கு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் அரசாங்க நிறுவனங்களை தனித்தனியாக பங்குபற்றி அவர்களது உத்தேச நிதிப் பாய்ச்சல் விபரங்களை நிதிய முகாமையாளரிற்கு சமர்ப்பிக்குமாறு நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் கோருதல் வேண்டும். எவ்வாறாயினும் நிதிய முகாமையாளரால் மீளாய்வாண்டிற்காக அத்தகைய உத்தேச நிதிப் பாய்ச்சல்கள் எதுவும் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் மொத்த முதலீடு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது ரூபா 4,829,382 ஆல் குறைவடைந்திருந்ததுடன் இதன் விளைவாக மொத்த வட்டி வருமானம் மீளாய்வாண்டின் போது ரூபா 12,668,938 ஆல் குறைவடைந்திருந்தது.

(ஆ) நிதியத்தின் ஒரு பங்குபற்றுநர் மீளாய்வாண்டின் போது ரூபா 88,280,470 மொத்த வைப்பை மீளப்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| பேரேட்டுக் கணக்குகள் | நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தால் முறையான பேரேட்டுக் கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| முதலீட்டாளர் ஆவணங்கள் | உரிய அனைத்து ஆவணங்களுடன் ஒவ்வொரு முதலீட்டாளர்களிற்கும் தனித்தனியான கோவைகள் பேணப்பட்டிருக்கவில்லை. |